**யாரோ மூலிகை உரம்** – (BD 502)

தாவரத்தின் பெயர் : யாரோ (Achillea millefolium)

தொடர்புடைய கிரகம் : சுக்கிரன் (Venus)

**பயன்கள் :**

சாம்பல் மற்றும் கந்தகச் சத்தை பயன்படுத்தும் ஆற்றலினை தாவரங்களுக்குக் கொடுக்கிறது.

நுண்ணூட்டச் சத்துக்கள் பலவற்றை (செலீனியம் போன்றவற்றை) பிற கோள்களின் சக்தியின் உதவியால் பெற்று தருகிறது.

**கேமோமைல் மூலிகை உரம்** – (BD 503)

தாவரத்தின் பெயர் : கேமோமைல் (Matricuria chamomilla)

தொடர்புடைய கிரகம் : புதன் (Mercury)

**பயன்கள் :**

தழைச் சத்தையும், சுண்ணாம்பு சத்தையும் நிலத்திற்கும் தாவரத்திற்கும் கொடுக்கும்.

இயற்கை கலப்பு உரங்களில் பயன்படுத்தும்போது அதில் உள்ள புரதப் பொருட்கள் மட்கவும், அதில் உள்ள தழைச் சத்து வீணாகாமல் பாதுகாக்கவும் உதவுகிறது.

**செந்தட்டி மூலிகை உரம்** – (BD 504)

தாவரத்தின் பெயர் : செந்தட்டி (Urtica parviflora)

தொடர்புடைய கிரகம் : செவ்வாய் (Mars)

**பயன்கள் :**

இதில் அதிக இரும்புச் சத்தும் சிறிதளவு கந்தகச் சத்தும் இருப்பதால் தாவரங்களுக்கு பச்சையம் உருவாக்குவதற்கும், இரும்பு மற்றும் கந்தகச் சத்துக் குறைபாட்டை நீக்கவும் உதவும்.

தாவரங்களுக்கு மாலிபிடினம், மக்னீசியம், வேண்டியம் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களைக் கொடுக்கின்றது.

இந்தச் செடியை, மாட்டு கோமியத்துடன் கலந்து பயன்படுத்தினால் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

இந்தச் செடியில் பார்மிக் அமிலம் அதிகம் உள்ளதால் உரத் தயாரிப்பில் மட்கு உருவாக உதவுகிறது.

ரைசோபியம் போன்ற நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

**ஓக் மூலிகை உரம்** – (BD 505)

தாவரத்தின் பெயர் : ஓக் (Quercus glauca)

தொடர்புடைய கிரகம் : நிலா (Moon)

**பயன்கள் :**

மண்ணிற்கு சுண்ணாம்புச் சத்தைக் கொடுக்கின்றது. மண்ணின் கார அமிலத் தன்மை சீராக்கும்.

பயிருக்கு சந்திரனின் சக்தியை கிடைக்கச் செய்து பூஞ்சான் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கிறது.

**டேன்டலியான் மூலிகை உரம் – (BD 506)**

தாவரத்தின் பெயர் : டேன்டலியான் (Taraxicum officinale)

தொடர்புடைய கிரகம் : வியாழன் (Jupiter)

**பயன்கள் :**

இதில் மிகுதியாக உள்ள சிலிசிக் அமிலம் தாவரத்திற்கும், நிலத்திற்கும் பிற கோள்களின் கதிரியக்க சக்தியின் பயன்தரும் விளைவுகளைப் பெற்றுக் கொள்ளும் திறனைக் கொடுக்கிறது.

சிலிக்கா சத்து நிறைந்துள்ளதால் பூச்சி மற்றும் பூஞ்சான் எதிர்ப்புத் திறனை தாவரங்களுக்குக் கொடுக்கிறது.

சுண்ணாம்பு, மக்னீசியம் மற்றும் மணிச்சத்து ஆகியவை சிறிய அளவு இருப்பதால் தாவரங்களில் இதன் குறைபாடுகளைச் சீர் செய்கிறது.

மேற்கூறிய 502, 503, 504, 505 மற்றும் 506 ஆகிய மூலிகை உரங்களை 1 கிராம் வீதம் கம்போஸ்ட் குவியலின் மையத்தில் தனித்தனியாக புகுத்தவேண்டும்.

**வெலேரியன் மூலிகை உரம் – (BD 507)**

தாவரத்தின் பெயர் : வெலேரியன் (Valeriana officinalis)

தொடர்புடைய கிரகம் : சனி (Saturn)

வெலேரியன் பூக்களின் சாறு இதற்கு பயன்படுகிறது. வெலேரியன் பாஸ்பரஸை தருகிறது. மற்ற தாவர தயாரிப்புகள் போலின்றி 507 கம்போஸ்ட் குவியலின் நடுவில் வைக்கப்படாமல், 10 மில்லி வெலேரியன் திரவம் 2 லிட்டர் நீருடன் 20 நிமிடங்கள் கலக்கப்பட்டு குவியலின் மேல் தெளிக்கவேண்டும்.

**பயன்கள் :**

இது சாம்புல் மற்றும் மணிச்சத்தைக் கொடுக்கும்.

இயற்கை கலப்பு உரக் குவியல்களில் மிதமான உஷ்ணத்தை உருவாக்கும்.

மண்புழுக்களை ஈர்க்கவும், அதன் பெருக்கத்திற்கு உதவுகிறது.

இந்த தாவரங்கள் பொதுவாக குளிர் பிரதேசங்களில் வளரக் கூடியது. நமது நாட்டில் ஊட்டி, கொடைக்கானல், மூணாறு, டார்ஜிலிங், இமயமலை அடிவாரம் போன்ற குளிர்ந்த தட்ப வெப்ப நிலை உள்ள பகுதியில் நன்றாக வளரும்.